### செஸ் உலகக் கோப்பை தொடரில் வெள்ளிப்பதக்கம் வென்ற

# பிரக்ஞானந்தாவால் நாடே பெருமை கொள்கிறது!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



சென்னை, ஆக. 26 –

செஸ் உலகக் கோப்பைத் தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தாவால் நாடே பெருமை கொள்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத் தில் பாராட்டியுள்ளார்.

2023 செஸ் உலகக் கோப்பை தொடரில் வெள்ளிப் பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா அவர்களை வாழ்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

2023 செஸ் உலகக் கோப்பைத் தொடரில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியமைக் காகச் 'சென்னையின் பெருமிதம்' பிரக்ஞானந்தாவுக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

உலகின் நம்பர் 2 ஆட்டக்காரரான நகமுரா, நம்பர் 3 ஆட்டக்காரரான கேருவனா ஆகியோரை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்த உமது பயணம் எங்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இறுதி முடிவு என்னவாக இருந்தாலும், உங்களது சாதனையோடு 140 கோடி இந்தியர்களின் இதயங்களும் இணைந்து துடிக்கிறது. நம் நாடே உங்களை நினைத்துப் பெருமை கொள்கிறது பிரக்ஞானந்தா!

நீங்கள் வென்றுள்ள இந்த வெள்ளிப் பதக்கமும், கேண்டிடேட்ஸ் தொடருக்குத் தகுதி பெற்றதும் இன்னும் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



மதுரை, வடக்கு மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் பி மூர்த்தி, கோ. தளபதிஎம்.எல்.ஏ., சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனை முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், துவக்கி வைத்தார். உடன் மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி அழைப்பாளர்கள், துணை அழைப்பாளர்கள், பொது மக்கள், மாணவர்கள் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்

# இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை ஆக.26-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சேலத்தில் டிசம்பரில் நடைபெற இருக்கிற இளைஞர் அணி மாநில மாநாடு சம்பந்தமாக புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை (27.8.2023) மாலை 4 மணி அளவில் புதுக்கோட்டை, தஞ்சை ரோட்டில் சிவப்பட்டி முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது. இந்த ஆலோசனை கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும், தமிழக விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமாக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு தமிழ் இனம் காக்க தமிழ் கொடியேந்தி சேலத்து மாநாட்டின் தீரர் கோட்டையாம் புதுக்கோட்டையில் சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமது அறிக்கையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கூறி உள்ளனர்.

### கக்கன் திரைப்படத்திற்கு வரிவிலக்கு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ்நாடு காங்கிரஸ் தெரிவித்தது

சென்னை, ஆக. 26-

கக்கன்திரைப்படத்துக்கு வரிவிலக்கு அளித்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுதந்திரப் போராட்ட தியாகியும், தமிழ்நாடு முன்னாள் அமைச்சருமான பி.கக்கன் வாழ்க்கை வரலாற்றை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்கிற வகையில் சங்கர் மூவீஸ் சார்பாக மேட்டுப்பாளையம் ஜோசப்பேபி தயாரித்து நடித்துள்ளார்.

இந்த திரைப்படம் உலகெங்கிலும் இன்று திரையிடப்பட உள்ளது. இந்த திரைப்படத்திற்கு வரி விலக்கு அளித்து ஆணை பிறப்பித்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டினார்!

நாமக்கல், ஆக 26-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், பொன்குறிச்சி, கூனவேலம்பட்டி, பொ.ஆயிபாளையம், ப.மு.பாளையம் ஆகிய ஊராட்சிகளில் ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப்பணி களுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டினார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், பொன்குறிச்சி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2022-2023 கீழ், ஐயப்பன் நகர் 2 வது குறுக்கு தெருவில் ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஐயப்பன் நகர் 3 வது குறுக்கு தெருவில் ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அருந்ததியர் காலனி வடக்கு தெருவில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி, கோப்பம்பட்டி காலனி அருந்ததியர் தெருவில் ரூ.10.52 லட்சம் மதிப்பீட்டில் விவசாய விளைப் பொருள் சேமிப்பு வைப்பு கூடம் அமைக்கும் பணிக்கும்,

தொடர்ந்து, பொ.ஆயிபாளையம் ஊராட்சியில் ஏழூர் ரோடு முதல் பின்புற தெரு வரை ரூ.7.73 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, சேவை மையம் பின்புற வீதியில் ரூ.3.49 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஏழூர் ரோடு முதல் பிள்ளாநல்லூர் பேரூராட்சி எல்லை 2 வது தெரு வரை ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஏழூர் ரோடு முதல் பிள்ளாநல்லூர் பேரூராட்சி எல்லை 3 வது தெரு வரை ரூ.8.32 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, சேவை மையம் பின்புற வீதியில் ரூ.5.10 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, கோப்பம்பட்டியில் ரூ.4.82 லட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணிக்கும், மேலும், ப.மு.பாளையம் ஊராட்சியில் புதூர் மலையாம்பட்டி அம்மன் நகர் 2வது வீதியில் ரூ.4.95 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அம்மன் நகர் முதல் குறுக்கு வீதியில் ரூ.2.03 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அம்மன் நகர் முதல் வீதியில் ரூ.2.16 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, குடித்தெரு முதல் வீதியில் ரூ.6.43 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அங்காளம்மன் நகர் முதல் வீதியில் ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அங்காளம்மன் நகர் முதல் 2 வது வீதியில் ரூ.3.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, அருந்ததியர் தெரு இந்திரா நகர் ஆலமர விதியில் ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் உறிஞ்சி குழாயுடன் கூடிய கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, புதூர் மலையாம்பட்டி குக் கிராமத்தில் ரூ.4.52 லட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணி, ப.மு.பாளையம் கிராமத்தில் விவசாய இடு பொருள் வைப்பு கூடம் ரூ.9.44 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கும்,

தொடர்ந்து, கூனவேலம்பட்டி ஊராட்சியில், கரையான்தின்னிபுதூர் கிழக்கு பகுதி 5 வது குறுக்கு தெருவில் ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஆதிதிராவிடர் தெரு 2 வது குறுக்கு வீதியில் ரூ.8.88 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஆதிதிராவிடர் தெரு 6 வது குறுக்கு வீதியில் ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, கூனவேலம்பட்டி 3 வது தெருவில் ரூ.3.30 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, பாலப்பாளையம் 9 வது தெருவில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி, ஆதிதிராவிடர் தெரு முதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை ரூ.5.87 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணி, கூனவேலம்பட்டி சித்தர் கோவில் செல்லும் சாலை அருகில் ரூ.4.82 லட்சம் மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணிக்கும் என மொத்தம் ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப் பணிகளுக்கு வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.பி.ஜெகநாதன், இராசிபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தனம், மேகலா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து சென்னை மற்றும் பிற மாவட்டங்களில்

# 5 லட்சம் குடியிருப்புகள் - தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன!

## சிலி குடியரசு நாட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சான்ட்டியாகோ (சிலி) ஆக. 26-

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடியிருப்புகள், தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ளன என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிலி குடியரசு நாட்டில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் 23.8.2023 முதல் 25.8.2023 வரை தென் அமெரிக்காவில் உள்ள சிலி குடியரசு நாட்டிற்கு மூன்று நாட்கள் அரசு முறைப் பயணமாக சென்று உள்ளார்.

முதல் நாளான 23.8.2023 அன்று சிலி குடியரசு நாட்டின் அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உலக வங்கி பிரதிநிதி களுடன் ஆலோசனைக் கூட்டம் சான்ட்டியாகோ மாநகரில் நடைபெற்றது.

சிலி குடியரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற திட்டமிடல் அமைச்சர் கார்லோஸ் மான்டெஸ் சிஸ்டர்னாஸ் (Mr. Carlos Montes Cisternas, Minister for Housing and Urban planning), பேசுகையில்,

"சிலி குடியரசு, இந்தியாவை போலவே வளர்ந்து வரும் நாடு. எங்கள் நாட்டில் கடந்த 50 ஆண்டு காலமாக பின்பற்றப்படும் வீட்டு வசதி கொள்கைகள், குடிசைகளை மேம்படுத்தும் திட்டங்கள், உள்கட்டமைப்பு மேம்பாடுகள், வறுமைக்குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை சிறப்பான முறையில் கையாண்டு வருகின்றோம். எங்களின் கடந்த காலம் மற்றும் தற்போதைய வீட்டு வசதி கொள்கைகள், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள், வங்கிகளின் செயல்பாடுகள், பயனாளிகளின் பங்களிப்புகள், கட்டுமான தொழிலில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து இந்த மூன்று நாள் பயணத்தில் விரிவாக எடுத்துரைக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில். "முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற உயர்ந்த நோக்கில் தொடங்கப்பட்டது. இந்த வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை, 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம்' என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு முதலிடம்

பெரிய மாநிலங்களில் நகர்ப்புற மக்கள்தொகையின் பங்கின் அடிப்படையில் தமிழ்நாடு முதலிடத்திலும், முழுமையான நகர்ப்புற மக்கள்தொகையில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. நகர்ப்புற மக்கள் தொகை 2023 இல் 60 சதவீதத்தை எட்டும் மற்றும் 2031 இல் 67 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய பொருளாதாரம் மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8% பங்களிக்கிறது. 2019-20 ஆம் ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 265 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாடு வாரியம் பல்வேறு வீட்டு மாதிரிகளை செயல்படுத்தி வருகிறது. தற்போது, கட்டப்பட்டு வரும் குடியிருப்புகள் 400 சதுர அடிபரப்பளவில் பல்நோக்கு அறை, படுக்கையறை, சமையலறை, குளியல் அறை மற்றும் கழிப்பறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வாழ்விடங்களிலேயே உட்கட்டமைப்புகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல், அடிப்படை மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளுடன் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள், பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் மறுகட்டுமானம், பயனாளிகள் தாமாக வீடுகள் கட்டுதல் மற்றும் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி வளாகங்கள் போன்ற வகைகளில் வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு ஒரு குடியிருப்புக்கு ரூ.1.5 இலட்சம் மானியமாகவும் தமிழ்நாடு அரசு ரூ. 7.50 இலட்சத்திலிருந்து ரூ.13 இலட்சம் வரை மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள தொகை பயனாளிகளால் ஏற்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.17 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 1,45,074 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12,500 கோடி மதிப்பீட்டில் 4,09,581 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்குத் திறனுக்கேற்ற வாடகை வீட்டுவசதி திட்டத்தின் கீழ் முன்னோடியாக 6 திட்டப்பகுதிகளில் 60,000க்கும் மேற்பட்ட படுக்கைகள், தங்கும் இடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து 5 இலட்சம் குடி யிருப்புகள்/தனி வீடுகள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் கட்டப்பட்டு ஏழை எளிய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சுமார் 1.30 இலட்சம் குடும்பங்களுக்கு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிலி குடியரசின் வீட்டு வசதி துறை சார்புச் செயலாளர் கில்லர்மோ ரோலாண்டோ (Guillermo Rolando MINVU's undersecretary), வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மற்றும் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் மீ.தங்கவேல், சிலி குடியரசின் உலக வங்கியின் பிரதிநிதிதிரு. விர்ஜீனியா பிராண்டன்(Virginia Brandon, Representative in Chile, World Bank ), உலக வங்கியின் மூத்த ஆலோசகர் திருமதி இசபெல் பிரெயின், (Isabel Brain, Senior Consultant, World Bank), உலக வங்கியின் மூத்த நகர்ப்புற நிபுணர்திருமதி யான் எஃப் ஜாங், (Yan F Zhang, Senior Urban Specialist World Bank ) உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குவளையில் துவக்கி வைத்த முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை, திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட உள்ளிக்கோட்டை சம்பட்டிக்குடிகாடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையா மங்களம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி. கே.ஆனந்த் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உள்ள காந்தி பஜார் அரசுநடுநிலைப்பள்ளி மற்றும் சக்கராபுரம் அரசு நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். அருகில் சப் கலெக்டர் கட்டாரவி தேஜா, ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.